**மாங்காடு நகராட்சி**

**நகர்மன்ற சாதாரணக் கூட்டம்**

2024ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30ம் தேதி திங்கட் கிழமை காலை 10.00 மணிக்கு மாங்காடு நகர்மன்ற கூட்ட அரங்கில் நடைபெற உள்ள நகர்மன்ற சாதாரணக்கூட்ட பொருள் நடவடிக்கை விவரம்

---

குறள்- எண்ணென்ப ஏனை யெழுத்தென்ப இவ்விரண்டுங்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு.

## குறள் விளக்கம் :

**என் என்று சொல்லப்படுவன எழுத்து என்று சொல்லப்படுவன ஆகிய இரு வகைக் கலைகளையும் வாழும் மக்களுக்குக் கண்கள் என்று கூறுவர்**

—***-----

**பொருள் எண்.1 665**

நகராட்சி ஆணையரின் ஆகஸ்ட் 2024 மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பதிவிற்காக வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**– மன்றம் பதிவு செய்யலாம்.

**பொருள் எண்.2 666**

நகராட்சியில் பல்வேறு இனங்களுக்கான ஆகஸ்ட் 2024 மாதத்திற்கான வரவு மற்றும் செலவுகள் மன்றத்தின் பதிவிற்காக வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**– மன்றம் பதிவு செய்யலாம்.

**பொருள் எண்.3 667**

நகராட்சி அலுவலகத்திற்கு வரப்பெற்றுள்ள முக்கிய அரசு கடிதங்கள் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**– மன்றம் பதிவு செய்யலாம்.

**பொருள் எண்.4 668**

மாங்காடு நகராட்சிக்குட்பட்ட 27 வார்டுகளுக்குட்பட்ட பகுதிகளில் மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை என்று தரம் பிரித்து வாங்கும் பொது சுகாதார நடவடிக்கை பணிகளுக்காக M/s. சீனிவாசா வேஸ்ட் மேனேஜ்மெண்ட் நிறுவனம் மூலம் வெளிக்கொணர்வு (Out sourcing) மூலம் துப்புரவு பணியாளர்கள் வழுங்கப்பட்டடு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்கண்ட நிறுவனத்தின் ஒப்பந்த காலம் 07.05.2024ம் தேதியுடன் முடிவடைந்துவிட்டது. நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், செங்கல்பட்டு அவர்களின் காணொலி கூட்டத்தின் அறிவுரையின்படியும், பொது மக்களின் சுகாதார நலன் கருதியும், அவசர அவசியம் கருதியும், மேற்கண்ட நிறுவனத்திற்கு ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் அதே விலை விகிதத்தின் அடிப்படையில் மே மாதம் முதல் ஜூலை மாதம் வரை மூன்று மாத காலத்திற்கு பணி நீட்டிப்பு செய்யப்பட்டு, பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பொது மக்களின் சுகாதார நலன் கருதியும், அவசர அவசியம் கருதியும் ஆகஸ்ட் 2024 ஒரு மாதத்திற்கு மட்டும், மேற்கண்ட நிறுவனத்திற்கு ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் அதே விலை விகிதத்தின் அடிப்படையில் பணி நீட்டிப்பு செய்து, பணி மேற்கொள்ளவும், அதற்கான தோராய செலவினம் ரூ.22.38/-லட்சம் செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு- நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று பணிநீட்டிப்பு உத்திரவு வழங்கி, பணிகள் மேற்கொண்டு செலவினம் மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்.5 669**

மாங்காடு நகராட்சிக்குட்பட்ட 27 வார்டுகளில் பொது சுகாதாரத்திட்டத்தின்கீழ் அனைத்து வார்டுகளிலும் (Out sourcing) மூலம் துப்புரவு பணியாளர்களை கொண்டு மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை என தரம் பிரித்து வாங்கும் பணிக்கு கடந்த 31.08.2024 வரை ஏற்கனவே கவனித்து வந்த M/s. சீனிவாசா வேஸ்ட் மேனேஜ்மெண்ட் நிறுவனத்தின் ஒப்பந்தக் காலம் முடிவுபெற்றுவிட்டதாலும், மேற்கண்ட பணியினை தங்களால் செய்ய இயலாது என கடிதம் வழங்கியுள்ளாதாலும், புதியதாக ஒப்பந்தப்புள்ளி கோரும் நாள் வரையில் தற்காலிகமாக 01.09.2024 முதல் 30.11.2024 வரையில் 3 மாத காலத்திற்கு மகளிர் சுய உதவிக்குழுக்கள் மூலம் விலைப்புள்ளி பெற்று மேற்கண்ட சுகாதாரப்பணிகள் மேற்கொள்ளவும் அதற்காகும் செலவினம் ரூ.67.00 லட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்காக பொருள் வைக்கப்படுகிறது.

அகு- மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்.6 670**

மாங்காடு நகராட்சிக்குட்பட்ட 27 வார்டுகளிலும், பொது சுகாதார நடவடிக்கையாக மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை என தரம் பிரித்து குப்பைகளை வாங்கும் பணிகளுக்காக ஏற்கனவே கவனித்து வந்த நிறுவனத்தின் ஒப்பந்தக் காலம் முடிவுபெற்றுவிட்டதாலும், மேற்கண்ட பணியினை தங்களால் செய்ய இயலாது என கடிதம் வழங்கியுள்ளாதாலும், புதிதாக ஓராண்டு காலத்திற்கு மேற்காணும் பணிகளை கவனிக்க பொறியியல் பிரிவின் மூலம் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, தகுதி வாய்ந்த நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி பெற்று, பணிகள் மேற்கொள்ளவும், அதற்கான தோராய ஆண்டு செலவினம் ரூ.318.00 லட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அகு- மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்.7 671**

இந்நகராட்சியில் புதியதாக வாங்கப்பட்ட 7 HP Laser all in one பிரிண்டர்களுக்கு தேவையான 88A Toner- 44 எண்ணிக்கை மற்றும் ஜெராக்ஸ் மிஷின் டோனர் 10 எண்ணிக்கை ஒப்பந்தப்புள்ளி பெற்று வாங்கிக்கொள்ளவும், அதற்காகும் தோராய செலவினம் ரூ.4.80 லட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அ.கு- மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்.8 672**

இந்நகராட்சிக்கு சொந்தமான காமாட்சியம்மன் கோயில் அருகில் அமைந்துள்ள நகராட்சி நவீன குளியலறை மற்றும் கட்டணக் கழிப்பிடத்தின் குத்தகை வசூல் உரிமம் கடந்த 2018-2019ம் ஆண்டில் திரு.ஏ.வெங்கடேஷ் என்பவருக்கு குத்தகைக்கு விடப்பட்டு 6 ஆண்டுகள் கடந்து விட்டதால், நகர்மன்றத் தீர்மானம் எண்.549 நாள்.24.06.2024ல் அனுமதிக்கப்பட்டதின்படி, பொதுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், 20.08.2024ம் தேதியன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் இரு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேலும் 21.08.2024ம் தேதியன்று நடைபெற்ற பொதுஏலத்தில் யாரும் கலந்துக்கொள்ள யாரும் முன்வரவில்லை. மேற்படி குத்தகையினத்திற்கு வசூலிக்கும் உரிமத்திற்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் கீழ்க்கண்டவாறு,

| | | முன்வைப்புத் தொகை | அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளி தொகை விவரம் |
|---|---|---|---|
| 1. | ஜோதி க/பெ.ஜேம்ஸ்<br>பூவிருந்தவல்லி | - ரூ.50000/- | ரூ.1,35,000/- |
| 2. | எம். நடராஜன்<br>மாங்காடு | - ரூ.50000/- | ரூ.1,30,000/- |

அகு.-

1). நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று, உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திருமதி.ஜோதி க/பெ.ஜேம்ஸ் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று, மேற்படி நவீன குளியலறை மற்றும் கட்டண கழிப்பிடம் சுங்கம் வசூலிக்கும் உரிமத்திற்கு 1.9.2024 முதல் 31.08.2027 வரையிலான மூன்றாண்டு காலத்திற்கு சுங்கம் வசூலிக்க, குத்தகைதாரருக்கு பணி உத்திரவு வழங்கியமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

2). ஏற்கனவே குத்தகை எடுத்துள்ள திரு.ஏ.வெங்கடேஷ் என்பவரிடம் 1.4.2024 முதல் 31.08.2024ம் தேதி வரையிலான காலத்திற்குண்டான சுங்கம் உரிம நிலுவைத் தொகை செலுத்தவும், குத்தகையினத்தை 3108.2024 முதல் ரத்து செய்தும் அறிவிப்பு வழங்கியமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்.9 673**

மாங்காடு நகராட்சியில் பொறியாளர் அவர்களுக்கு அலுவலக பயன்பாட்டிற்காக இயங்கும் ஈப்பு வாகனம் எண்.TN 85U 9200 தற்போது **8227**கி.மீ. மேல் கடந்து விட்டதால் இரண்டாம் சர்வீஸ் செய்ய அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமான Automative Manufacture pvt., Ltd., Chennai-122, No.1, Alapakkam main road, Boomadevi Nagar, Gerugambakkam, Kancheepuram, Tamilnadu, நிறுவனம் மூலம் பழுதுபார்க்கப்பட்டு சர்வீஸ் செய்யப்பட்டமைக்கு மேற்படி நிறுவனத்திடமிருந்து பட்டியல் தொகை ரூ.**8829**/– (inclusive GST) வரப்பெற்றுள்ளது. பட்டியல் தொகையினை நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று **2024.2025**ஆம் ஆண்டு பொது நிதியின் கீழ் *பணி* மேற்கொண்டமைக்கு ஒப்புதல் வேண்டி மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு – 1.** மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி **02.08.2024** தேதியில் பெற்று பட்டியல் தொகை வழங்கியமைக்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**பொருள் எண்.10** 674

மாங்காடு நகராட்சி ஆணையர் அவர்கள் அலுவலக பயன்பாட்டிற்கு பயன்படுத்தப்பட்டு வரும் பொலிரோ ஈப்பு வாகனம் (TN85J0708) 5100Kms கடந்ததை தொடர்ந்து வாகன பராமிரிப்பிற்காக (5th General Service) அங்கீகரிக்கப்பட்ட பணியான D.No.235 mount poonamallee High road Iyyappanthangal Chennai-56 உள்ள " MARUDHAR MISHRI MOTORS LLP" பணிமனையில் பழுது பார்க்கப்பட்டு தற்போது மேற்படி நிறுவனத்திடமிருந்து வாகன பழுதுபார்ப்பு கட்டணம் மற்றும் உதிரி பொருட்களுக்கான கட்டணம் ரூ.11,106/- உண்டான பட்டியல் வரப்பெற்றுள்ளது மேற்படி பட்டியல் தொகை ரூ.11,106/-ஐ நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பொது நிதியிலிருந்து வழங்கியமைக்கு மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு – 1. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பட்டியல் தொகை வழங்கியமைக்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**பொருள் எண்.11** 675

மாங்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட 27 வார்டுகளுக்குட்பட்ட பகுதிகளில் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கை பணிகளுக்காக M/s Blooming Recycles நிறுவனம் மூலம் 52 DBC பணியாளர்கள் வழங்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பொதுமக்களின் சுகாதார நலன் கருதியும் அவசர அவசியம் கருதியும் மேற்கண்ட நிறுவனத்திற்கு ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் அதே விலை விகிதத்தில் 01.09.2024 முதல் 31.10.2024 வரை இரண்டு மாதத்திற்கு பணி நீட்டிப்பு வழங்கி நகர் மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டமைக்கும் அதற்கான தோராய செலவினம் ரூ.22.00லட்சத்திற்கும் மன்றப் பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்.12** 676

மாங்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பொது சுகாதாரபிரிவில் கொசு ஒழிப்பு தெளிப்பான் இயந்திரத்திற்கு பயன்படுத்தப்படும் கேஸ் சிலிண்டர் அவசர அவசியம் கருதி வாங்கி மேற்கொள்ள ஒப்பந்ததாரரிடம் விலைப்புள்ளி கோரப்பட்டது, அதில் பின்வரும் விவரப்படியான மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ.எண். | வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் பெயர் | விலைப்புள்ளிகளின் விலை விகிதம் |
|---|---|---|
| 1 | திருவாளர்கள். ஸ்ரீ ராகவேந்திரா எண்டர்பிரைசஸ் | 1.4% குறைவு |
| 2 | திருவாளர்கள். வி.கே.பி.எண்டர்பிரைசஸ் | 2.8 % அதிகம் |
| 3 | திருவாளர்கள்.எம்.ஜெ. ஆர்.டிரேடர்ஸ் | 9.8 % அதிகம் |

வரப்பெற்றுள்ள விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளிகள் அளித்துள்ள ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்க மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அ கு:- மேற்கண்ட பணிக்குண்டான செலவீனத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்.13 677**

மாங்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பொது சுகாதாரப் பிரிவின் வாயிலாக திடக்கழிவு மேலாண்மை பணிகள், பிளாஸ்டிக் ஒழிப்பு பணிகள மற்றும் டெங்கு காய்ச்சல் மற்றும் இதர வைரஸ் காய்ச்சல் பரவாமல் தடுக்க பொதுமக்களுக்கு விழிப்புணர்வு செய்திட Hand Bill, Sticker ஆகியன தேவைப்படுவதால் அவற்றை ரூ.5.00லட்சம் மதிப்பீட்டில் கொள்முதல் செய்ய விலைப்புள்ளி கோரப்பட்டது. அதில் 3 விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ. எண். | வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் பெயர் | விலைப்புள்ளிகளின் விலை விகிதம் |
|---|---|---|
| 1 | திருவாளர்கள். கிசைன் சர்வீஸ் சின்டிகேட் குவாலிட்டி ஆப்செட் பிரிண்டர்ஸ் | 1.60% குறைவு |
| 2 | திருவாளர்கள். கலர் விங்கஸ் | 20.12 % அதிகம் |
| 3 | திருவாளர்கள்.ஸ்ரீராஜேஸ்வரி ஆப்செட் பிரிண்ட்ர்ஸ் | 121.40 % அதிகம் |

வரப்பெற்றுள்ள விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளிகள் அளித்துள்ள ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்கி பணி மேற்கொண்டமைக்கு மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அ கு:- மேற்கண்ட பணிக்குண்டான செலவீனத்தை பொது நிதியிலிருந்து பணி மேற்கொண்டமைக்கு அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்.14 678**

மாங்காடு நகராட்சியில் பின்வரும் பணிகளை 2024-2025ஆம் ஆண்டு பொது நிதியில் மேற்கொள்ள மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு வரப்பெற்றுள்ளது. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை 2024-25ம் ஆண்டின் குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ.லட்சத்தில் |
|---|---|---|
| 1 | மேல்தெரு பகுதியில் புதிய ஆழ்துளை கிணறு அமைத்து அதே பகுதியில் 2000 லிட்டர் கொள்ளளவு கொண்ட RO Plant அமைத்தல். | 14.00 |
| 2 | வன்னியர்பட்டு பகுதியில் புதிய ஆழ்துளை கிணறு அமைத்து அதே பகுதியில் 2000 லிட்டர் கொள்ளளவு கொண்ட RO Plant அமைத்தல். | 14.00 |
| 3 | சையத்சாதிக் நகர் பகுதியில் புதிய ஆழ்துளை கிணறு அமைத்து அதே பகுதியில் 2000 லிட்டர் கொள்ளளவு கொண்ட RO Plant அமைத்தல். | 14.00 |
| 4 | சீனிவாசா நகர் (வார்டு எண்.14)ல் புதிய ஆழ்துளை கிணறு அமைத்து அதே பகுதியில் 2000 லிட்டர் கொள்ளளவு கொண்ட RO Plant | 14.00 |

| | | |
|---|---|---|
| | அமைத்தல். | |

**<u>அலுவலகக்குறிப்பு:</u>** மேற்கண்ட பணிக்கான செலவினத்தை 2024-25ம் ஆண்டு குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்

**பொருள் எண்.15 679**

மாங்காடு நகராட்சி கணிணி வசூல் மையத்தில் ஏற்கனவே உள்ள (Dot Matrix) ரசீது பிரிண்ட் செய்யும் பிரிண்டர் மிகவும் பழுதடைந்து பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளதால், புதியதாக TVS Dot Matrix Printer - 2 எண்கள் வாங்கிக்கொள்ளவும், அதற்கான தோராய செலவினம் ரூ.58,000/-ற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு. மன்றம் அனுமதி வழங்கலாம்.

**<u>பொருள் எண்:16 680</u>**

மாங்காடு நகராட்சியில் **2024–2025**ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாடு திட்டத்தின் கீழ் பின்வரும் இனங்களுக்கு **06.09.2024** அன்று ஆண்டு ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டுள்ளது. கீழ்கண்ட ஒப்பந்தப்புள்ளியில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்க மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. லட்சத்தில் | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்தின் விவரம் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | மாங்காடு நகராட்சி பட்டூர் பகுதியில் நியாயவிலைக்கடை கட்டடம் கட்டும் பணி | 17.00 | திருவாளர் கே.ஜி.ஆர்.குருப்ஸ் | மதிப்பீடு தொகையை விட 0.10% குறைவு |
| | | | திருவாளர் ஆரோக்கியநாதன் கன்ஸ்டிரக்‌ஷன்ஸ் | மதிப்பீடு தொகையை விட 27.74% அதிகம் |
| 2 | மாங்காடு நகராட்சி வசந்தபுரம் பகுதியில் நியாயவிலைக்கடை கட்டடம் கட்டும் பணி | 17.00 | திருமதி.ஆர்.அமுதா | மதிப்பீடு தொகையை விட 0.09% குறைவு |
| | | | திருவாளர் அமிமு எண்டர்பிரைசஸ் | மதிப்பீடு தொகையை விட 1.33% குறைவு |

அலுவலக குறிப்பு :– மேற்படி பணியின் அவசியம் கருதி குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் வழங்கிய ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்க மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**பொருள் எண்.17 681**

மாங்காடு நகராட்சியில் மாநில பேரிடர் வெள்ள தடுப்பு நிதியின் கீழ் கட்டப்பட்ட மூடியுடன் கூடிய மழைநீர் வடிகால்கள் அருகில் மழைநீர் சாலையிலேயே தேங்கி நிற்பதால் மழைநீர் வடிகால்கல் அருகில் Slit Catch pit அமைக்கவும், அதற்கான தோராய செலவினம் ரூ.12.80லட்சம் நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:</u>** மேற்கண்ட பணியினை மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்தை

2024-25ம் ஆண்டு பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்:18 682**

மாங்காடு நகராட்சியில் **2024–2025**ஆம் ஆண்டிற்கு ஆண்டு ஒப்பந்த அடிப்படையில் நகராட்சி பகுதியில் உள்ள குடிநீர் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகளில் திரவக்குளோரின் சப்ளை செய்யும் பணிக்கு **09.08.2024** அன்று ஆண்டு ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டது. அதன் தொடர்ச்சியாக கீழ்கண்ட மூன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. லட்சத்தில் | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்தின் விவரம் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகளில் பொருத்தப்பட்டுள்ள குளோரினேட்டர்களுக்கு திரவ குளோரின் சப்ளை செய்தல் (45,500லிட்டர்) | **9.50** | திருவாளர் தமிழ்நாடு கெமிக்கல் இன்டஸ்டிரிஸ் | மதிப்பீட்டு தொகையை விட **17.14**% குறைவு |
| | | | திருவாளர் ஸ்ரீ ராஜ கணபதி என்ஜினியரிங் ஒர்க்ஸ் | மதிப்பீட்டு தொகையை விட **6.29**% குறைவு |
| | | | திருவாளர் ஸ்ரீசபரி என்ஜினியரிங் | மதிப்பீட்டு தொகையை விட **2.86**% குறைவு |

மேற்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான விலை கொடுத்துள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வழங்கிய மூன்று நிறுவனங்களும் தேர்வு செய்யப்பட்டனர். மேற்கண்ட பணி குடிநீர் அவசியப் பணி என்பதாலும், திரவக்குளோரின் தேவைப்படும்போது உடனடியாக சப்ளை செய்யப்பட வேண்டும் என்பதாலும், தேர்ந்தெடுக்கப்பட்ட மூன்று நிறுவனங்களிடமும் ஏற்கனவே வேறு நகராட்சிகளில் சப்ளை செய்ய வழங்கப்பட்ட சமீப கால பணி ஆணை நகல் மற்றும் அவ்வாறு சப்ளை செய்த நகராட்சிகளிலிருந்து பெறப்பட்ட குறித்த நேரத்தில் நல்ல முறையில் நாளது வரை சப்ளை செய்யப்பட்டு வருகிறது என்ற சமீப கால சான்று நகல் ஆகியவை ஆன்லைன் மூலம் குறித்த காலத்தில் பதிவேற்றம் செய்ய கோரப்பட்டது. அதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திருவாளர் தமிழ்நாடு கெமிக்கல் இன்டஸ்டிரிஸ் நிறுவனத்தார் குறித்த காலத்தில் பதிவேற்றம் செய்யாததால் அவரின் ஒப்பந்தப்புள்ளி ஏற்கப்படவில்லை. அதற்கடுத்த குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திருவாளர் ஸ்ரீ ராஜ கணபதி என்ஜினியரிங் ஒர்க்ஸ் நிறுவனத்தார் தங்களின் ஒப்பந்தப்புள்ளியின்போது கூடுதலாக மேற்கண்ட ஆவணங்களையும் இணைத்தே பதிவேற்றம் செய்ததால் அவரின் ஒப்பந்தப்புள்ளி ஏற்கப்பட்டு ஆன்லைனிலும் பதிவேற்றம் செய்யப்பட்டது. எனவே குடிநீர் அவசியப்பணி என்பதால் திருவாளர் ஸ்ரீ ராஜ கணபதி என்ஜினியரிங் ஒர்க்ஸ் நிறுவனத்தாருக்கு பணி ஆணை வழங்கியதற்கு மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :– **1)** மேற்படி பணியின் அவசியம் கருதியும் குறித்த காலத்தில் திரவக்குளோரின் சப்ளை செய்யப்பட வேண்டும் என்பதை கருதி அதற்கடுத்த குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திருவாளர் ஸ்ரீ ராஜ கணபதி என்ஜினியரிங் ஒர்க்ஸ் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

**2)**அந்நிறுவனத்தாருக்கு பணி உத்திரவு வழங்கியதற்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**<u>பொருள் எண்:19 683</u>**

**இந்நகராட்சியின் ஒப்பந்ததாரர்கள் 2021-2022ம் ஆண்டிற்கு முன்னர் மூன்றாண்டுகள் முடிவுற்ற காலத்திற்கான பணிகளில் பிடித்தம் செய்யப்பட்ட வைப்புத்தொகை கீழ்க்கண்ட விவரப்படி ஒப்பந்ததாரர்களுக்கு வழுங்க மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது,**

| S.No | Name of the Contractor | Lapsed Deposit Rs. |
|---|---|---|
| 1 | Arunkumar | 30799 |
| 2 | M.N.Balasundaram | 172923 |
| 3 | Dheenarangan | 59418 |
| 4 | Menaka & Co | 72543 |
| 5 | Mohan Contract | 112106 |
| 6 | MRN engineering | 165125 |
| 7 | P.Sargunan | 3950 |
| 8 | Panneerselvam | 56933 |
| 9 | R.Amudha | 95817 |
| 10 | Sarguna Construction | 267700 |
| 11 | Thillai Nataraja Road Construction Pvt Ltd | 32691 |
| | Total | 1070005 |

**அ.கு. காலங்கடந்த வைப்புத்தொகை என்பதால் ஒப்பந்ததாரர்களுக்கு வைப்பு தொகை வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம் .**

**<u>பொருள் எண்.20 684</u>**

மாங்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட செம்பரம்பாக்கம் ஏரியின் பாசன வாய்கால்கள் அப்பாவு நகர், செல்வகணபதி நகர், ஹரி அவென்யூ, ஒட்டநத்தம், பாலமுருகன் நகர் மற்றும் மங்களபுரம் ஆகிய பகுதிகளில் ரூ.**9.70**லட்சம் மதிப்பீட்டில் தூர்வாரி சுத்தம் செய்யவும், பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தின் ஒப்புதலை எதிநோக்கி தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொண்டமைக்கும், குறைந்த விலை விகிதம் அளித்துள்ள ஒப்பந்ததாருக்கு பணி உத்திரவு வழங்கியமைக்கும் பின்னேற்பு ஒப்புதலுக்கு மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. லட்சத்தில் | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்தின் விவரம் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | மாங்காடு நகராட்சி எல்லைக்குட் பட்ட செம்பரம்பாக்கம் ஏரியின்பாசன வாய்கால்கள் அப்பாவு நகர், செல்வகணபதி நகர், ஹரி அவென்யூ, ஒட்டநத்தம், பாலமுருகன் நகர் மற்றும் மங்களபுரம் ஆகிய பகுதிகளில் தூர்வாரி சுத்தம் செய்யும் பணி | **9.70** | திருவாளர் ஆத்விக் அன்டு அசோசியேட்ஸ் | மதிப்பீடு தொகையை விட **5.45**% அதிகம் |
| | | | திருவாளர் தில்லை நடராஜா ரோடு கன்ஸ்டிரக்ஷன்ஸ் பிரைவேட் லிட்., | மதிப்பீடு தொகையை விட **1.82**% குறைவு |
| | | | எம்.என்.பாலசுந்தரம் | மதிப்பீடு தொகையை விட **1.82**% அதிகம் |

அலுவலக குறிப்பு :– மேற்படி பணியின் அவசியம் கருதி குறைந்த விலைப்புள்ளி விலை விகிதம் வழங்கிய ஒப்பந்ததாருக்கு பணி உத்திரவு வழங்க மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**<u>பொருள் எண்.21 685</u>**

மாங்காடு நகராட்சி வார்டு எண்.**26**ல் உள்ள மாங்காடு கோவூர் செல்லும் சாலை குறுக்கே அமைந்துள்ள மணப்பாத்தான் கால்வாய் சர்வே எண்.**301**ல் பொது பணித்துறைக்கு சொந்தமானது, இந்த கால்வாயில் உள்ள சாலை இணைப்பு பாலம் மாங்காடு பேரூராட்சியாக இருந்தபோது கட்டியது தற்போது சேதமடைந்து இடிந்து விழும்

நிலையில் உள்ளது. எனவே பொதுபணித்துறையில் தடையில்லா சான்று பெற்று மேற்படி பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அ.கு. மன்றம் அனுமதிக வழங்கலாம்.**

**பொருள் எண்.22 686**

மாங்காடு நகராட்சிக்குட்பட்ட சுல்தான் நகர் மற்றும் சைபர் சிட்டி பின்புறம் செல்லும் பொதுபணித்துறைக்கு சொந்தமான தந்திக்கால்வாயில் சர்வே எண்.396ல் கழிவுநீர் அதிக அளவில் செல்வதால் பொது மக்கள் நோய் தொற்று ஏற்படும் அபாயம் உள்ளதால், ஏதேனும் ஒரு அரசு நிதி பெற்று மேற்படி பகுதியில் மழைநீர் வடிகாலில் பாலம் அமைக்க மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அ.கு. மன்றம் அனுமதி வழங்கலாம்.**

**பொருள் எண்.23 687**

மாங்காடு நகராட்சிக்குட்பட்ட 8வது வார்டு வசந்தபுரம் விரிவு பகுதியின் குறுக்கே செல்லும் பொதுபணித்துறைக்கு சொந்தமான தந்திக்கால்வாயில் கழிவுநீர் அதிக அளவில் செல்வதால் பொது மக்கள் நோய் தொற்று ஏற்படும் அபாயம் உள்ளதால், ஏதேனும் ஒரு அரசு நிதி பெற்று மேற்படி பகுதியில் மழைநீர் வடிகாலில் பாலம் அமைக்க மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அ.கு. மன்றம் அனுமதி வழங்கலாம்.**

**பொருள் எண்.24 688**

மாங்காடு நகராட்சியில் ஆணையருக்கு பயன்படுத்தப்பட்டு வரும் ஈப்பு வாகனம் TN 85 S 0708 -க்கு காப்பீடு முடிவடைவதால் காப்பீடு புதுப்பிக்கவும் அதற்கான தோராய செலவினம் ரூ.30000/—ஐ நகராட்சி பொதுநிதியில் வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அ.கு. மன்றம் அனுமதி வழங்கலாம்.**

**பொருள் எண்.25 689**

மாங்காடு நகராட்சியில் எதிர்வரும் வடகிழக்கு பருவ மழையின் போது அதிக அளவு மழைநீர் குடியிருப்பு பகுதிகளில் தேங்காமல் பாதுகாக்கவும், பாதுகாப்பு உபகரணங்கள் வாங்கவும், பொது சுகாதார பணிகள் மேற்கொள்ளவும் வேண்டி உள்ளதால் பின்வரும் விவரப்படியான பணிகளை ஒப்பந்தப்புள்ளி கோரி பணிகளை பொது நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ.எண். | வேலையின் பெயர் | தோராய மதிப்பீடு தொகை ரூ.லட்சத்தில் |
|---|---|---|
| 1 | மாங்காடு நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தேங்கும் மழைநீரினை ஜேசிபி வாகனம் மூலம் வெளியேற்ற ஜேசிபி வாகனம் வாடகை அடிப்படையில் சப்ளை செய்தல் | 9.10 |
| 2 | மணல் மூட்டைகள், சவுக்கு கொம்பு, ரோப், பவர்ஷா, ரெயின் கோர்ட் போன்ற பாதுகாப்பு உபகரணங்கள் சப்ளை செய்தல் | 4.00 |
| 3 | மழைநீர் வடிகால்கள் தூர்வாரி சுத்தம் செய்யும் பணி | 5.00 |
| 4 | ஆயில் என்ஜின், மின்மோட்டார் வாடகைக்கு சப்ளை செய்தல் | 9.10 |
| 5 | சாலைகள் பழுதுநீக்கம் செய்தல் பணி | 5.00 |

**அலுவலகக்குறிப்பு:** **மேற்கண்ட பணியினை மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்தை 2024-25ம் ஆண்டு பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.**

பொருள் எண்.26 690

மாங்காடு நகராட்சியில் பொது சுகாதார பணிக்கு பயன்படுத்தப்பட்டு வரும் 8 எண்ணிக்கை LCV வாகனங்களின் காப்பீடு முடிவடைவதால் காப்பீடு புதுப்பிக்கவும் அதற்கான தோராய செலவினம் ரூ,165000/—ஐ நகராட்சி பொதுநிதியில் வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அ.கு. மன்றம் அனுமதி வழங்கலாம்.

பொருள் எண்.27 691

மாங்காடு நகராட்சியில் பின்வரும் பணிகளை 2024-2025ஆம் ஆண்டு குடிநீர் நிதியில் மேற்கொள்ள மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு வரப்பெற்றுள்ளது. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை 2024-25ம் ஆண்டின் குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ.எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ.லட்சத்தில் |
|---|---|---|
| 1 | ஜீவா நகர் (வார்டு எண்.5) பகுதியில் புதிய ஆழ்துளை கிணறு அமைத்தல் | 3.00 |
| 2 | மங்களபுரம் ஹரி அவென்யூ (வார்டு எண்.21) பகுதியில் புதிய ஆழ்துளை கிணறு அமைத்தல் | 3.00 |

அலுவலகக்குறிப்பு: மேற்கண்ட பணிக்கான செலவினத்தை 2024-25ம் ஆண்டு குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்

பொருள் எண்.28 692

இந்நகராட்சி அலுவலக பயன்பாட்டிற்கு கூடுதலாக ஒரு ஜெராக்ஸ் மிஷின் ஒப்பந்தப்புள்ளி பெற்று வாங்கிக்கொள்ளவும, அதற்காகும் தோராய செலவினம் ரூ.6.00லட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அ.கு. மன்றம் அனுமதி வழங்கலாம்.

பொருள் எண்.29 693

மாங்காடு நகராட்சியில் பின்வரும் பணிகளை 2024-2025ஆம் ஆண்டு பொது நிதியில் மேற்கொள்ள மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு வரப்பெற்றுள்ளது. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை 2024-25ம் ஆண்டின் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ.லட்சத்தில் |
|---|---|---|
| 1 | ராஜகுமாரி தெரு மழைநீர் வடிகால் பழுதுபார்த்தல் பணி | 5.00 |
| 2 | கீழ்ரகுநாதபுரம் மழைநீர் வடிகால் அமைத்தல் | 4.50 |
| 3 | செந்தமிழ்நகர் மழைநீர் வடிகால் அமைத்தல் | 4.50 |
| 4 | மேலாண்டை மாட வீதி மழைநீர் வடிகால் அமைத்தல் | 16.00 |
| 5 | கலைமகள் நகர் தார்சாலை அமைத்தல் | 18.00 |
| 6 | சிவானந்தா நகர் பூங்கா பராமரிப்பு பணி | 5.00 |
| 7 | வார்டு எண்.3 கணபதி நகர் தார்சாலை அமைத்தல் | 11.00 |
| 8 | வார்டு எண்.3 ஸ்ரீ நகர் அரசமரம் அருகில் காரிய மேடை அமைத்தல் | 7.00 |

| | | |
|---|---|---|
| 9 | வார்டு எண்.12 ஸ்ரீ சக்ரா நகர் ஜெயகர் தெரு தார்சாலை அமைத்தல் | 3.60 |
| 10 | வார்டு எண்.16 ஸ்ரீ சக்ரா நகர் ராம்தேவ் தெரு தார்சாலை அமைத்தல் | 9.00 |

**அலுவலகக்குறிப்பு:** மேற்கண்ட பணிக்கான செலவினத்தை 2024-25ம் ஆண்டு பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்.30 694**

இந்நகராட்சி அலுவலக பயன்பாட்டிற்கு 58KW திறன் கொண்ட ஜென்செட் ஒன்று ஒப்பந்தப்புள்ளி பெற்று வாங்கிக்கொள்ளவும், அதற்காகும் தோராய செலவினம் ரூ.9.00லட்சத்திற்கும் மற்றும் மேற்படி ஜென்செட் வைக்க தரைதளம் அமைத்து பொருத்தும் பணிக்கு தோராய செலவினம் ரூ2.00லட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அ.கு. மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்.31 695**

வடகிழக்கு பருவமழையின்போது தாழ்வான பகுதிகள் மற்றும் சாலைகளில் தேங்கிய மழைநீரினை வெளியேற்றுவதற்கு பயன்படுத்தப்படும் மின் மோட்டார்கள் மற்றும் டீசல் என்ஜின் பழுது பார்ப்பதற்கும் மற்றும் டீசல் என்ஜின்களுக்கு சக்கரம் பொருத்துவதற்கும் தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.8.40லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அ.கு. மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்.32 696**

மாங்காடு நகராட்சிக்குட்பட்ட **25**வது வார்டு ஏ.எஸ் நகர் பகுதியின் குறுக்கே செல்லும் பொதுபணித்துறைக்கு சொந்தமான தந்திக்கால்வாயில் கழிவுநீர் அதிக அளவில் செல்வதால் பொது மக்கள் நோய் தொற்று ஏற்படும் அபாயம் உள்ளதால், ஏதேனும் ஒரு அரசு நிதி பெற்று மேற்படி பகுதியில் மழைநீர் வடிகாலில் பாலம் அமைக்க மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அ.கு. மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்.33 697**

மாங்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.27 சாந்தி நகர், வன்னியர்பட்டு சுடுகாடு அருகில் ரூ.7.00லட்சம் மதிப்பீட்டில் காரியமேடை அமைக்கவும் அதற்கான செலவினத்தை 2024-2025 பொதுநிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அ.கு. மன்றம் அனுமதி வழங்கலாம்.

நகரமன்ற தலைவர்
மாங்காடு நகராட்சி